DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2020 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw22 /Pw8/ R.Saravanan/காவல் துணை கண்காணிப்பாளர் பணியிடை பயிற்சி மையம் கோயம்புத்தூர். | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**06.10.2025.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

நான் தற்போது பணியிடை பயிற்சி மையம் கோயம்புத்தூரில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது தளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.சிவராஜ் என்பவர் காவல் நிலைய குற்ற எண்.523/2020 ச.பி.307 IPC and 27 (1) Arms Act. வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்ததை நான் பகல் 12.45 மணிக்கு பெற்றுக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகள் வீரபத்திரா, மாதேவப்பா ஆகியோர் அவ்விடத்தை அடையாளம் காட்ட அதை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.12** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.13** ஆகும். பின்னிட்டு சம்பவ இடத்தில் இருந்த கரிமருந்து வாடையுடன் கூடிய சிறிய துண்டு துணி ஒன்றை வரவழைக்கப்பட்ட தடைய அறிவியல் அலுவலர் முன்னிலையில் கைப்பற்றி 13.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும், சாட்சிகளின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தேன். சாட்சிகள் வீரபத்திரா, மாதேவப்பா ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.14** ஆகும். சாட்சிகள் ருத்திரப்பா, மல்லேஷ் த/பெ.மல்லப்பா, மாதேஷ், வேலு, செந்தமிழன், சக்திவேல், மல்லேஷ் த/பெ.மாரப்பா, பிரதாப் ஆகிய வன அலுவலர்கள் சாட்சிகளை விசாரித்தேன். பின்பு சாட்சிகள் சேட்டு, கெம்பன்னா, ஜனர்தனா ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இட சாட்சிகள் விசாரணையில் இருந்தும் , புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என தெரிந்து இவ்வழக்கின் எதிரி முருகேஷ் என்பவரை தேடிவந்த நிலையிலும் 30.08.2020 ம் தேதி காலை 6 மணிக்குகிடைத்த இரகசிய தவலின் படி மேற்படி எதிரியை பாலதொட்டணப்பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே இருப்பதாக தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரித்தபோது இவ்வழக்கு சம்மந்தமான குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காலை 7 மணிக்கு நடைமுறைகள் பின்பற்றி கைது செய்தும், பின்னர் எதிரி தானாக முன் வந்து சொன்னா வாக்குமூலத்தினை வரவழைக்கப்பட்ட சாட்சிகள் VAO ராமஜெயம், சம்பத்குமார் கிராம உதவியளாா் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ. 15**

பின்னர் எதிரி மேற்படி சாட்சிகளுடன் அழைத்துக்கொண்டு சம்பவ இடத்தில் இருந்து சுமார் ½ கி.மீ தொலைவில் உள்ள மேற்குபனை வீட்டு புருபாவி என்ற இடத்திற்கு அழைத்து சென்றேன். அங்கு ஒரு பாறையின் பின்புறம் மறைத்து வைத்திருந்த விலங்குகளை வேட்டையாட எதிரி முருகேஷ் மற்றும் ருத்திரப்பா ஆகியோர் பயன்படுத்திய நாட்டு கள்ளதுப்பாக்கிகள் 2 ஐ மேற்படி சாட்சிகள் முன்பு ஆஜர்படுத்தினர். எதிரி முருகேஷ் என்பவர் பயன்படுத்திய துப்பாக்கியின் நீளம் 145 செ.மீ. கருப்பு நிறத்தில் மரத்தினால் செய்யப்பட்ட நாட்டு துப்பாக்கி அதன் உபகரணங்களுடன் காட்டு விலங்குகளை வேட்டையாட பயன் படுத்தும் கரி மருந்து சுமார் 400 கிராம், கரிமருந்து குண்டுகள் சுமார் 100 கிராமம், இரும்பு ஈயம் சுமார் 100 கிராம் , சிறிய சுமார் 21 செ.மீ அளவுள்ள கத்தி ஒன்று, கருப்பு கலர் துணிப்பையில் சுற்றி வைக்கப்பட்டிருந்ததை எதிரி எடுத்து ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். ருத்திரப்பா என்பவர் பயன் படுத்திய கள்ள நாட்டு துப்பாக்கி ஒன்று சுமார் 155 செ.மீ.நீளமுள்ள பழுப்பு நிற மரத்தினால் செய்யப்பட்ட நாட்டு துப்பாக்கி ஒன்று. சுமார் 100 கிராம் குண்டுகள், கரிமருந்து சுமார் 100 கிராம் ஆகியவற்றை மற்றொரு கருப்புநிற துணிப்பையில் இருந்ததை ருத்திரப்பா என்பவர் பயன் படுத்தியாக எதிரி முருகேஷ் என்பவர் ஆஜர் படுத்தியதை 9.30 மணிக்கு கைப்பற்றுதல் மஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மஜர் **அ.த.சா.ஆ.16** ஆகும். மேலும் எதிரி அதே சாட்சிகளுடன் பகல் 12 மணிக்கு முதுகேரிதொட்டி கிராமத்திற்கு அழைத்து சென்று பகல் 12 மணிக்கு மேற்படி எதிரி தங்கியிருக்கும் மாமனாரின் வீட்டின் அருகே புதரில் மறைத்து வைத்திருந்த இரத்தக்கரை படிந்த ருத்ரப்பாவின் சட்டை ஒன்று, இரத்தக்கரை படிந்த ஜீன்ஸ்டைப் பேன்ட் ஒன்று, ருத்திரப்பாவின் சட்டையில் வலது புற வயிற்று பகுதியில் குண்டு துளைத்த ஓட்டை பகுதியுடன் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மஜர் **அ.த.சா.ஆ.17** ஆகும். பின்னர் எதிரி சம்பத்தின் போது தான் அணிந்திருந்த சட்டை ஒன்று, இரத்தக்கரை படிந்த ரெட்கலர் சட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை மேற்படி மகஜரில் கைப்பற்றி எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து பாரா காவல் வசம் ஒப்படைத்தேன். மேற்படி எதிரி முருகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி வழக்கின் சட்டபிரிவை 307, 27 (1) Arms Act, ல் இருந்து 308 IPC Act and 25(1)(a) of Arms Act ஆக சட்ட மாறுதல் அறிக்கையுடன் எதிரி மற்றும் சொத்துக்களை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.18** ஆகும். சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.19** ஆகும். அன்றைய தினமே காலை 10 மணிக்கு காவேரி மருத்துவமனையில் இருந்து இவ்வழக்கில் குண்டுகாயம் பட்ட ருத்திரப்பா என்பவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட சுமார் 10 கிராம் எடையுள்ள துப்பாக்கிகுண்டு ஒன்றினையும் வழக்கின் நிமித்தம் படிவம் 91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.20** ஆகும். மேற்படி வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததும் இல்லாமல் சாட்சி பொருட்களை சம்மந்தபட்ட ஆய்வகங்களுக்கு அனுப்பி உரிய பரிசோதனை மேற்கொண்டு அதன் அறிக்கை பெறவேண்டி வினாக்கள் அடங்கிய அறிக்கையினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தன் பேரில் மேற்படி வினாக்களுக்கான பதில் உரையினை சம்மந்தப்பட்ட ஆய்வகங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளார்கள். Forensic Report **அ.த.சா.ஆ.21** ஆகும். ருத்தரப்பாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட குண்டு **அ.சா.பொ.4** ஆகும். எதிரி ருத்தரப்பாவின் துப்பாக்கி குண்டு கிழித்த சட்டை **அ.சா.பொ.5** ஆகும். எதிரி முருகேஷ் என்பவரின் இரத்தக்கரை படிந்த சிவப்பு கலர் சட்டை **அ.சா.பொ.6** ஆகும். கரிமருந்து 400 கிராம் **அ.சா.பொ.7** ஆகும். குண்டுகள் 100

கிராம் **அ.சா.பொ.8** ஆகும். இரும்பு ஈயம் 100 கிராம் **அ.சா.பொ.9** ஆகும். சிறிய கத்தி **அ.சா.பொ.10** ஆகும். கருப்பு நிற பைத்துணியில் வைத்திருந்த எதிரி ருத்திரப்பா என்பவர் வைத்திருந்த கரிமருந்து 100 கிராம் **அ.சா.பொ.11** ஆகும். குண்டு 100 கிராம் **அ.சா.பொ.12** ஆகும். 10.09.2020 ம் தேதி சாட்சிகள் மாதேஷ், மல்லேஷ், வேலு ஆகியோர்களை விசாரித்து அவர்களின் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.07.2021 ம் தேதி Scientific Officer சிந்தாசாகுல்ஹமீது, ஸ்ரீவித்யாஸ்ரீனிவாசன், துணை இயக்குநர் திருதி.சிவபிரியா ஆகியோர்களை விசாரித்தேன். மேலும் இவ்வழக்கில் மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் திருநாவுக்கரசு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சிவராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(2 துப்பாக்கிகளும் பாதுகாப்பு கருதி ஆயுதப்படை கிருஷ்ணகிரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பில் 2 துப்பாக்கிகளை சான்றுபொருளாக குறியீடு செய்யவேண்டும் என்பதால் துப்பாக்கிகளை ஆயுதப்படை கிருஷ்ணகிரியில் இருந்து வரவழைப்பதற்காக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.